[1979 ஏப்ரல் 24

திருத்தணி சுப்ரமணிய சுவாமி கோவில்.

* வினா எண். 791— திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு செய்தி அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கல்பட்டு மாவட்டம் திருத்தணி சுப்ரமணிய சுவாமி கோயிலுக்குச் சொந்தமான நகைகளில் மோசடி செய்யப் பட்டதாக அரசுக்கு அண்மையில் புகார் ஏதேனும் வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில் அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : (அ) சென்ற வருடம் ஏப்ரல் மாதம், முன்னாள் அறங்காவலர் ஒருவரிடமிருந்து புகார் ஒன்று அரசுக்கு வந்தது.

(ஆ) வந்த புகார் குறித்து விசாரணை செய்ய அரசு முடிவெடுத்து, விசாரணையை வருவாய் வாரிய உறுப்பினர் ஒருவரிடம் ஒப்படைத்திருக்கிறது. தேவைப்பட்ட சாட்சிகளை விசாரிக்கவும், சம்பந்தப்பட்ட ஆவணங்களைப் பரிசீலிக்கவும் அவருக்கு சட்ட ரீதியாக அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

திரு. இரா. தாமரைக்கனி : தலைவர் அவர்களே, தமிழக ஆலயங்களில் இருக்கும் ஆபரணங்கள் பண்டைய வரலாற்றையும், கலாசாரத்தையும் நமக்கு உணர்த்தும் வகையில் முக்கியத்துவம் வாய்ந்தது. திருத்தணி கோவிலுக்கு ஏற்பட்ட கதி மற்ற கோவில்களில் உள்ள நகைகளுக்கு ஏற்படாமல் தடுக்க அரசு என்ன வழிவகைகளைக் கையாண்டு வருகிறது? ஒவ்வொரு கோவில்களில் உள்ள ஆபரணங்களையும் நகைகளையும் போட்டோ எடுத்து அதன் ஒரு நகலை அறநிலையத் துறை ஆணையர் அலுவலகத்திலும், மற்ற ஒன்றை கோவிலிலும் வைத்து, அதன் மூலம் அந்த நகைகளைப் பாதுகாக்க அரசு ஏற்பாடுகளைச் செய்யுமா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் இந்து சமய அறநிலையத் துறை மானிய விவாதத்தின்போது கூர்ந்து கவனித்து இருந்தால் இதற்கு விடை அப்போதே கிடைத்து இருக்கும். அப்போதே அது பற்றித் தெரிவித்தேன். ஆலயங்களில் உள்ள ஆபரணங்கள், சிலைகள் ஆகியவற்றைப் பாதுகாக்கத்தக்க வகையில் வழிவகைகளை இந்த அரசு முறையாக அமல் நடத்திக் கொண்டு இருக்கிறது. திருத்தணியில் நடைபெற்றதுபோல் என்று சொல்லியிருக்கிறார்கள். திருத்தணியில் என்ன நடைபெற்றது என்பதற்கு விசாரணை

1979 ஏப்ரல் 24]

போடப்பட்டு இருக்கிறது. அந்த விசாரணை முடிந்து, முடிவு தெரிகிற வரையில் அங்கே என்ன நடந்தது என்று குற்றஞ்சாட்டுவது அவ்வளவு சரியாக இருக்காது என்று நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. இரா. சண்முகம் : தலைவர் அவர்களே திருத்தணி சுப்பிரமணியசுவாமி கோவிலில் நகைகளில் மோசடி செய்யப்பட்டதாகக் கேள்வி கேட்கப்பட்டு இருக்கிறது. அங்கே நிர்வாக அதிகாரியாக இருந்தவர் அந்த நகைகளை இந்து சமய அறநிலையத் துறை ஆணையர் அனுமதி பெறாமலேயே உருக்கியதாகவும் சொல்கிறார்கள். அப்படி ஒருவரையும் கேட்காமலேயே அவர் செய்த அந்தச செய்கைக்கு ஏன் துரிதமாக நடவடிக்கை எடுக்கவில்லை என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர் எம் வீரப்பன் : பேரவைத் தலைவர் அவர்களே, துரிதமாக நடவடிக்கை எடுக்கப்பட்டதன் விளைவுதான், விசாரணைக்கு ஒருவர் நியமிக்கப்பட்டு, அவர் விசாரணை செய்து கொண்டு இருக்கிறார். விசாரணையில் இருக்கும் ஒரு விஷயம் பற்றி கேள்வி கேட்பதும், பதில் சொல்வதும் அவ்வளவு உகந்ததாக இருக்காது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(முற்பகல் 9-40)

திரு. எம். எம். ஏ. ரசாக் : தலைவரவர்களே, திருத்தணி கோவிலில் நகை மோசடி செய்யப்பட்டதைப்போல தமிழ்நாட்டில் வேறு எந்தெந்த கோவில்களில் மோசடி செய்யப்பட்டிருக்கிறது? பைம்பொழில் குமாரசாமி தேவஸ்தானத்தைச் சேர்ந்த தங்க நகைகள் காணாமல் போய் விட்டதாக நிர்வாக அதிகாரி புகார் செய்திருக்கிறாரா? அரசுக்கு அதுபற்றிய தகவல் வந்திருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவரவர்களே, நான் முன்னால் சொல்லியதைப்போல 'திருத்தணி கோவிலில் நகை மோசடி நடைபெற்றதை போல, திருத்தணி கோவிலில் மோசடி செய்யப்பட்டதைப் போல, என்று மாண்புமிகு உறுப்பினர்கள் வலியுறுத்தக் கூடாது என்று கேட்டுக் கொள்கிறேன். அது விசாரணையில் இருக்கிற விவகாரம் என்று தெளிவாகத் தெரிவித்திருக்கிறேன், விசாரணை முடிவு தெரிந்த பின்னால்தான் என்ன நடந்தது என்பது தெரியும். பைம்பொழில் ஆலயத்தைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அங்கே ஏதாவது நடைபெற்றிருந்தால் குறிப்பாகச் சுட்டிக் காட்டினால் அது குறித்து தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.